# தவக்காலம் முதல் வாரம் - ஞாயிறு

## முதல் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

இறை இயேசுவில் அன்பிற்குரியவர்களே, இன்று தவக்காலத்தின் முதலாம் ஞாயிறு வழிபாட்டை சிறப்பிக்க வந்துள்ள உங்கள் அனைவருக்கும் இயேசுவின் இனிய நாமத்தில் அன்பான வணக்கங்கள்.

பிறப்பு முதல் இறப்பு வரை நாம் ஒவ்வொருவரும் பலவித சோதனைகளுக்கும், வேதனைகளுக்கும் ஆளாக வேண்டியிருக்கின்றது. குழந்தை முதல் முதியவர் வரை சோதனைகள் நமக்குள் வேறுபட்டாலும், சோதிக்கப்படுகிறோம் என்பதுவே உண்மை. கிறிஸ்தவர்களாகிய நாம் நமக்கு வரும் சோதனைகளை எப்படி எதிர்கொள்ள வேண்டும், அணுக வேண்டுமென்பதை இன்றைய வாசகங்கள் நமக்கு மிக அழகாக எடுத்துக் கூறுகிறது.

தொடக்கக் காலத்தில் இஸ்ரயேல் மக்கள் பலவித சோதனைக்கு ஆளானார்கள். ஆனால், அதிலிருந்து வெளிவர முயற்சி எடுக்கத் தவறிப் போனார்கள்.

- உடல் தேவைகளை நிறைவு செய்தல்,
- உலகப் பொருட்கள் மீது பற்றுக் கொள்ளுதல்,
- இறைவனுக்கு எதிராக செயல்படுதல்

என்னும் மூன்று நிலைகளில் இறைமகன் இயேசு சோதிக்கப்படுகின்றார். நமக்கும் இத்தகைய சோதனைகள் எழும். இறைமகன் இயேசுகிறிஸ்து இந்த மூன்று சோதனைகளையும் இறைவார்த்தையால் வென்று, நமக்கு நல்ல முன்மாதிரியைக் கொடுத்துச் சென்றிருக்கின்றார்.

கடவுள் நம்மோடு இருக்கிறார் என்பதை உணர்த்துவது திருவருகைக் காலம். நாம் கடவுளோடு இருக்கிறோம் என்பதை உணர்த்துவது தவக்காலம். ஆகவே, நாம் ஒவ்வொரு முறையும் நமக்கு ஏற்படும் சோதனையில் சாத்தானை வென்று நாம் கடவுளோடு இருக்க முயற்சிக்க வேண்டும்.

“கடவுள் நம்பிக்கைக்குரியவர். அவர் நமது வலிமைக்கு மேல் நம்மை சோதனைக்குள்ளாக விடமாட்டார். சோதனை வரும்போது அதைத் தாங்கிக் கொள்ளும் வலிமையை நமக்குத் தருவார். அதிலிருந்து விடுபட வழி செய்வார்” என்ற புனித பவுலின் இறைவார்த்தையில் நம்பிக்கை கொண்டு செயல்பட வேண்டும். ஆண்டவருக்கு உகந்தவர்கள் சோதனைகளை வெல்வார்கள்.

தவக்காலம் நாம் ஆண்டவரோடு இருப்பதற்கானது. ஆகையால், நாம் செபத்திலும், தவத்திலும், புண்ணியத்திலும் செயல்பட்டு, பாவத்தை விட்டு விலகி நிற்போம். அதற்கான அருள் வேண்டி, நம்மையே முழுமையாக அர்ப்பணிப்போம், இத்தியாகத் திருப்பலியில்.

## மன்றாட்டுகள்

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. “தீர்ப்பிடாதீர்கள், தீர்ப்புக்குள்ளாவீர்கள்” என்ற ஆண்டவரே,

நாங்கள் செய்கின்ற தவறுகள், பாவங்களை எல்லாம் மறந்து, பிறர் செய்த தவறுகளையே முன்னிருத்தி, அவர்கள்மேல் இல்லாதது, பொல்லாதது சொல்லி, அவர்களைத் தவறாகத் தீர்ப்பிட்டு, அவர்கள் பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தி, அவர்கள் வாழ்வை பாழ்படுத்தி விடுகின்றோம். இத்தகைய இழிவான மனநிலையை மாற்றி, எங்கள் தவறுகளை உணர்ந்து, அதை மாற்றி வாழும் மனநிலையைத் தந்தருள வேண்டுமென்று, இறைவா நாங்கள் உம்மை மன்றாடுகின்றோம்.

2. “கொடுங்கள், கொடுக்கப்படும்” என்ற ஆண்டவரே,

எத்தனையோ மக்கள் தங்கள் வாழ்வாதாரங்களான உணவு, உடை, உறைவிடம் இன்றி வாழும் நிலையை கண்ணுறும் நாங்கள், அவர்களின் ஏழ்மை, வறுமை நிலையை மாற்றிட, எங்களிடம் இருப்பதை, இல்லாத அவர்களோடு பகிர்ந்து வாழும் பரந்த, தாராள இதயத்தையும், கொடுத்திட பொன்னோ, பொருளோ இல்லாத நிலையில் பிறருக்கு எங்கள் நேரத்தை, ஊக்கம், ஆறுதல் நிறைந்த வார்த்தைகளை, உடனிருப்பைக் கொடுத்து வாழும் உயர்ந்த உள்ளத்தைத் தந்தருள வேண்டுமென்று, இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. “மன்னியுங்கள், மன்னிக்கப்படுவீர்கள்” என்ற ஆண்டவரே,

எங்கள் குடும்ப உறவுகள், உறவினர்கள், உடன் பணியாற்றுவோர், உடன் வசிப்போர் போன்ற பல நிலைகளில் எங்கள் உறவுகளில் உள்ளவர்களுடன் பல காரணங்களினால் சண்டை, சச்சரவுகளுடன், பகைமை கொண்டு, அவர்களை மன்னிக்க மனமில்லாமல் வாழும் கோழைத்தனமான மனதினை மாற்றி, இறைமகனைப் போல், அனைவரையும் துணிந்த உள்ளத்துடன் மன்னித்து, ஏற்று வாழும் உள்ளத்தைத் தந்தருள வேண்டுமென்று, இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. “மலடியை அவள் இல்லத்தில் வாழ வைக்கின்றார், தாய்மைப்பேறு பெற்று மகிழுமாறு அவளுக்கு அருள்கின்றார்” என்று மொழிந்த இறைவா,

திருமணமாகி குழந்தைச் செல்வமின்றி தம்பதியரை உம் பாதம் அர்ப்பணிக்கின்றோம். அன்று சாரா, அன்னாள், எலிசபெத் இவர்களின் கண்ணீரை, வேண்டுதல்களை ஏறெடுத்து, அவர்களுக்கு நல்ல மக்கட்பேற்றினை அளித்ததுபோல், இவர்களின் கண்ணீர், வேண்டுதல்களை உம் கருணைக்கண் கொண்டு கண்ணோக்கி இவர்களுக்கும் நன்மக்கட்பேற்றினைத் தந்தருள வேண்டுமென்று, இறைவா உம்மிடம் மன்றாடுகின்றோம்.

5. “உங்கள் துயரம் மகிழ்ச்சியாக மாறும்” என்ற ஆண்டவரே,

ஒவ்வொருவரின் வாழ்விலும் பல்வேறு பிரச்சனைகள், வேதனைகள், துன்பங்கள் அலைஅலையாக வந்து கொண்டிருக்கின்றன. அதில் பலர் கரையேற முடியாமல், வழி தெரியாமல் மூழ்கி விடுகின்றனர். இவர்களை அதிலிருந்து மீட்டு கரை சேர்க்கும் ஓடமாக நீரே உற்ற துணையாக இருந்து அவர்கள் துயரங்களை மகிழ்ச்சியாக மாற்றியருள வேண்டுமென்று, இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com